முருகப்பெருமான் துணை

**மகான் நந்தீஸ்வரர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.05.2022, சனிக்கிழமை**

1. ஆறுமுகஞானியே அரங்கா
ஆற்றலாய் கலியிடரை வெல்ல
ஆறுமுகனார் சக்தியாக வந்த
அண்ணலே ஞான தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசிதனை
ஆசிபட சுபகிருது தகர் திங்கள்
அறிவிக்க அறுநான்கு திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 24 ம் நாள், 07.05.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் நந்தீஸ்வரர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமின்றி மக்களை மீட்க
சுத்தநெறி காட்டும் மாதவசியே
4. தவசியே உன் உபதேசம்
தன்னார்வத் தொண்டு வளர்ப்பதுடன்
அவனியில் அமைதி பாதுகாப்பு
ஆனந்தமான வாழ்வு தருகின்ற
5. தருகின்ற சமூக நடத்தையாக்கி
தரணியில் சமத்துவ பலம் கூட்டி
பெருமைபட வளர்ச்சியருளும்
பிசகில்லா எங்கும் மனிதனிடை
6. மனிதனிடை தயவை பெருக்கி
மனபக்குவம் ஞான பலமும்
இனிபிறவாப் பேற்றுக்கான
எல்லாத் தகுதியும் வளர்க்கும்
7. வளர்க்கவே அரங்க சிறந்த
வல்லமை மிக்க ஞானி
தளர்வின்றி தொடர்ந்துமே
தரணியோர் வருக மாற்றம் உண்டு
8. உண்டான கலித்துன்பங்கள்
உலகை விட்டு அகன்றோட
தண்டாயுதன் அனுப்பிய சக்தி
தனிப்பெரும் அவதாரம் நீ
9. அவதாரம் உலகோர் அறிய
அகிலம் மாற்றம் தன்னை
அவதார உன் நோக்கமாக
அடைதல் காணும் சடுதி என்பேன்

10. என்கவே துறையூர் வாழ்
இறைபலமாக வாழும் ஞானி
சண்முகனார் ஏழாம் படைவீடாக்கி
சற்குருவாய் அங்கிருந்து அருள

11. அருளவே தேடிநாடி வர
அனைவருக்கும் சித்தி உண்டு
அருளுடன் பொருள் வளமும் உண்டு
அறிவித்த அருளாசி முற்றே

–சுபம்–